# மாலை மணி

Regd. No. 5458
Phone: 4502
காலைப் பதிப்பு
விலை அரை அணா

திராவிடர் தமிழ்த் தினசரி ★ ஆசிரியர்: கே. ஜி. இராதாமணாளன்

மாலை 4 | சென்னை 6-7-54 | மணி 16


# மடாதிபதிகளின் தமிழ்ப்பணிக்குச் சுயமரியாதைக்காரர்களே காரணம்

## மேல்நாட்டார் நீரிலிருந்து நெருப்பையல்லவா கண்டு பிடித்திருக்கிறார்கள்!

## இரட்டைமாட்டு வண்டிக்குப் பிறகு நம் முன்னேற்றம் தடைபட்டு விட்டது ஏன்?

## ஆவடியில் அறிஞர் அண்ணா பேச்சு

(நேற்றைய தொடர்ச்சி)

அகல் விளக்கு மட்டும் வைத்துக்கொண்டு உலகம் முழுவதும் ஒரு காலத்தில் வாழ்ந்தனர். இந்த நாடும் வாழ்ந்தது. அமெரிக்கா, பிரான்ஸ் இங்கிலாந்து. ஆகிய நாடுகளுந்தான் வாழ்ந்தன. ஆனால் அங்கே அகல் விளக்குடன் நின்று விடவில்லை,

அகல் விளக்கு இருந்தது அடுத்து பலப்பல. பின்னர் அரிக்கன் விளக்கைக் கண்டு பிடித்தனர், அடுத்து பெட்ரோ மாக்ஸ், என்று முன்னேறி இறுதியில் மின்சார விளக்கையும், அதிலே பலப்பல மாதிரிகளையும் கண்டுபிடித்தனர். ஆனால் இங்கோ?

இங்கே, இந்த நாட்டில் அத்தகைய முன்னேற்றம் நடந்ததா? இல்லை. அகல் விளக்குடன் நின்றது. அகல் விளக்கு குத்து விளக்காக மாறியதுடன் முன்னேற்றம் தடைப்பட்டுவிட்டது. குத்துவிளக்கின்மேல் அன்னத்தை வைக்கலாமா? மயிலை வைக்கலாமா? என்பதில்தான் நாம் முன்னேற்றம் கண்டோம். குத்துவிளக்கைக் காமாட்சி முன் வைப்பது பற்றியும், மீனாட்சியின் முன் நிறுததுவது பற்றியுந்தானே இந்த நாடு கவலைப்பட்டது!

இப்படியிருந்த நாட்டில் எப்படிப் புதுப்புது விளக்குகளைக் கண்டு பிடித்து முன்னேறிடும் நிலை பிறக்க முடியும்? இந்த முன்னேற்றத் தடைக்குக் காரணம் என்ன?

நாமென்ன மூளை பலம் அற்றவர்களா? ஆற்றல் ஒரு சிறிதும் இல்லாதவர்களாகவா நமது முன்னோர் வாழ்ந்தனர்? இல்லையே? வான்முட்டும் கோபுரங்களை நமது நாட்டில்தானே காண முடியும்? மூளை பலத்தின் அதிகுறிதானே அவையெல்லாம்? அலங்கார மாட மாளிகைகளை அமைத்துள்ளோமே! அறிவாற்றல் தானே அதற்குக் காரணம்? அழகான திருக்குளங்கள் ஏற்படுத்தியுள்ளதும் நமது திறமைக்கு எடுத்துக் காட்டுகள் தான். கோயில்களில் உள்ள சிலைகள் நமது முன்னோரின் சிற்பக் கலையின் சிறப்பை விளக்கிக் கொண்டுதான் இருக்கின்றன?

மூளை பலம், அறிவு, ஆற்றல், திறமை அத்தனையும் இந்த நாட்டில் இருக்கத்தான் இருந்தன—இருந்தும் வருகின்றன. ஆனால் அவை வாழ்வுப் பிரச்சினைகட்கும், வாழ்க்கை வசதிகட்கும்—-முன்னேற்றத்திற்கும் ஏற்ற வழி, வகைகளிலே பயன்படவில்லை — பயன்படுத்தப் படவே யில்லை.

இரட்டை மாட்டு வண்டியும், குதிரை வண்டியும் செய்த பிறகு மேலே எதைச் செய்துள்ளது இந்த நாடு? கிணறுகள் தோண்டியதோடு நீர்ப்பாசன வசதிக்கான எந்த முன்னேற்ற வழி முறைகளைச் செய்து கொண்டது, தானாகவே? எதுவும் இல்லையே?

மேல் நாட்டில் கிணறுகள் வெட்டினார்கள். அதோடு நிற்கவில்லை காட்டாறுகளைக் கட்டுப்படுத்தி, அணைகட்டி, நீரைத் தேக்கி, நீரிலிருந்து நெருப்பையல்லவா கண்டுபிடித்துப் பயன் படுத்த முனைந்தார்கள். அணைகளிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரம்

2-ம் பக்கம் பார்க்க

# இந்தியர்கள் விரைவில் வெளியேற்றப் படுவர்

## இலங்கைப் பிரதமர் அறிவிப்பு

கொழும்பு. ஜூலை, 3—

இலங்கைப் பிரதமர் சர்ஜான் கொத்தல்வாலை நகர ஹாலில் நடைபெற்ற கூட்ட மொன்றில் பேசுகையில் இலங்கையில் தற்காலிகமாக பர்மிட்டுகள் பெற்றுள்ள இந்தியர்கள் ஒரு லட்சத்தி ஐம்பதினாயிரம் பேர் உள்ளனர் என்றும் அவர்கள் சீக்கிரமே வெளியேற்ற முயற்சிகள் செய்து வருவதாகவும் கூறினார். மேலும் அவர் பல ஸ்தாபனங்களில் இலங்கையரல்லாத இந்தியர்களுக்கு வேலை யளிப்பதை குறைப்பதற்காக சட்டமியற்றுவதற்கான யோசனைகள் மந்திரிகள் யோசித்து வருவதாகவும் தெரிவித்தார். இலங்கை வாசிகள் பெரும்பாலோர் வேலையில்லாமல் இருப்பதே இதற்குக் காரணமாகும் என்பதாக தொழில் மந்திரி அறிவித்திருப்பதாக அக்கூட்டத்தில் இலங்கை பிரதமர் அறிவித்தார்,

# கோயில்களில் தமிழில் அர்ச்சனை கூடாதாம்!

## ஆகம பள்ளிகள் நிறுவ முடிவு

## தென்னிந்திய அர்ச்சகர் சங்க கூட்டத்தின் தீர்மானம்!

சென்னை, ஜலை 5—

தென்னிந்திய அர்ச்சகர்கள் சங்க காரியக் கமிட்டி, வித்வான்கள், ஜில்லா கன்வீனர்கள் கிளைச் சங்கங்களின் தலைவர்களின் கூட்டம், சென்னை ஜார்ஜ் டவுன் தம்பு செட்டித் தெருவிலுள்ள கிளைச் சங்கத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டதிற்கு திருப்பூர் வேதாரண்ய ஐயங்கார் தலைமை வகித்தார், சங்கத்தின் ஆதரவில். சென்னை மாகாணத்தின் முக்கிய இடங்களில் ஆகம பாடசாலைகள் ஏற்படுத்தமுடிவு செய்யப்பட்டது. கோயில்களில் பூஜை, முதலிய காரியங்கள் செய்வதற்கு வேண்டிய பயிற்சியை அர்ச்சகர்களுக்கு, இப்பாடசாலை அளிக்குமாம். இதற்கான கால அளவு ஒரு வருடம் எனவும் முடிவு செய்யப்பட்டது. மேலும் கூட்டத்தில், தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டும் என்று புதிதாக கிளம்பியுள்ள கிளர்ச்சியைக் கண்டித்து, வேத மந்திரங்கள் சமஸ்கிருதத்தில்தான் இயற்றப் பட்டவை ஆதலால், அதனை மாற்றுவது கூடாது, சைவ வைஷ்ணவ பெரியோர்கள், இம் முறையைத்தான் ஆதரித்துள்ளனர். என்றும் எனவே இம்மாறுதல் சட்ட விரோதமும், அரசியலமைப்புக்கு முரண்பட்டதுமாகும் என்றும் கூறப்பட்டது. மாணவர்களுக்கும், பாடசாலைகளுக்கும் பயன்பட வேண்டும் என்ற கருத்தில் பலவகை ஆகமங்களை சமஸ்கிருதத்தில் அச்சிட முடிவும் செய்யப்பட்டதாம்.

## அணுசக்தி கடிகாரம்

புதுடில்லி, ஜூலை 3—

புதுடில்லி, தேசிய பௌதிக ஆராய்ச்சிக் கூட்டத்தில் அணு இயக்கத்தைக் கொண்டு கடிகாரம் அமைக்கப்படுகிறது. அமோனியா போன்ற வாயு ஒளிக்கதிர்களின் உதவிகளைக் கொண்டு இக்கடிகாரம் இயங்குமாம்,

## பாக்—பிரெஞ்சு வியாபார ஒப்பந்தம்

கராச்சி, ஜூலை, 3—

பாகிஸ்தான்-பிரெஞ்சு சர்க்கார் ஜனவரி முதல் ஜூன் 55 வரை இருநாடுகளும் பரஸ்பரம் வியாபார ஒப்பந்தம் செய்யும் உடன் பாட்டில் கையெழுத்திட்டுள்ளது.

மாலைமணி

சென்னை 6—7—54

# புலிக்குகையில் நரிகள் நர்த்தனம்!

“எப்பக்கம் வந்து புகுந்துவிடும், இந்தி எத்தனை பட்டாளம் கூட்டிவரும்?” என்று விண்ணதிர முழக்கமிட்டு, சிங்கத் தமிழர் சீறியெழுந்தனர். “ஆச்சாரியாரே. ஆரியப்புதல்வரே! அரியாசனத்தில் கொலுவீற்றிருந்த எங்கள் அன்னைத் தமிழை, அழிக்கவா துணிந்தீர்? முடியாது ஆச்சாரியாரே, முடியாது! உமது கபடம் வெல்லாது! கனவு பலிககாது! கட்டாயமாக இந்தியைப் படித்தாகவேண்டுமெனறு கட்டளை பிறப்பிக்கும் உமது காட்டாட்சிக்கா நாங்கள் பணிவோம்! பாரும்! ஆணவ போதையிலே, அகங்கார வெறியிலே இருக்கும் ஆச்சாரியாரே பாரும்—உமது கட்டளை தவிடுபொடியாகப் போவதை! உமது காட்டாட்சிமண்ணோடு மண்ணாகப்போவதை!” என்று போர் முரசு கொட்டி புறப்பட்டது தமிழர்ப்பட்டாளம்!

“தமிழ்! தமிழ்! அதுவே எங்கள் வாழ்வு! அதுவே எங்கள் உயிர்!” என்ற முரசொலி, பட்டிதொட்டிகளில் எல்லாம் எதிரொலித்தது. தமிழரின் மேன்மையை இகழ்ந்தனர் கனகன் விசயன் என்ற ஆரியவேந்தர் என்பதைக் கேள்விப்பட்டதும், சேரன் செங்குட்டுவன் மட்டுமே கண்களிலே கனலைக்கக்கினான். வேல் ஏந்த வீரர்களுக்குக் கட்டளையிட்டான்! வடநாடு பாய்ந்தான்! வாகை சூடினான்! தமிழின் தூய்மையை மாசுபடுத்த துணிந்துவிட்டார் ஆச்சாரியார் என்பதை அறிந்ததும், ஒருவர் இருவர் அல்ல, தமிழகம் முழுவதுமே பாசறையாக மாறிவிட்டது! யார் கண்ணில் பார்த்தாலும் தமிழ்ஒளி, யார்வாயில் கேட்டாலும் தமிழ் இசை, எப்பக்கம் திரும்பினாலும் தமிழ் முழக்கம்! இப்படி எங்கும் தமிழ்,எல்லா இடங்களிலும் தமிழ்!

கர்ப்பவதிகளும், தங்கச்சிலைபோல் தாம் பெற்ற குழந்தைகளை இடையிலே வைத்த தாய்மார்களும், தள்ளாதவயது கிழவர்களும், வீரர்களும், வீராங்கனைகளும் ‘மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எம்மை மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!’ என்று வீரப்பண்பாடி, வேங்கை நடைநடந்து, வெஞ்சிறைக் கோட்டங்களை வேகவேகமாக வீரர்க்கோட்டமாக்கிக் கொண்டனர்.

அதிகாரத்தோடு நுழையப்பார்த்த இந்திமொழியைத் தகர்த்தெறிய தமிழன் தொடுத்த போரும், அந்த மொழிப்போராட்டத்தில் தாலமுத்து நடராசன் என்ற இரண்டு தூயமணிகளை உயிரோடு பலிகொடுத்த கோரத்தையும் நாம் மறந்தாலும், ஆச்சாரியாரின் உள்ளம் மறவாது. ஆமாம், ஆச்சாரியாரின் அரசியல் வாழ்விலே, அவர்கண்ட முதல் தோல்வியாகும் அது! அதன் பிறகு அல்லவோ—தமிழில் கைவைக்க துணிந்தபிறகு அல்லவோ, அடுக்கடுக்காகத் தோல்விகள் அவரை அணைக்க ஆரம்பித்தன!

சென்னையிலுள்ள தாலமுத்து நடராசன் கல்லறை, தமிழன் தொடுத்த மொழிப்போராட்டத்தை உலகிற்கு அறிவிக்கிறது! தமிழன் வென்றான், அந்த வீரகாவியம் உலக வரலாற்றிலே, பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்டுவிட்டது.

மயில் ஆடக்கண்டு, வான்கோழியும் ஆடினால் எப்படியிருக்கும்? அதுபோல இன்று நம் நாட்டில் ஒரு வான்கோழிக கூட்டம் ஆடஆரம்பித்திருக்கிறது! தமிழ்மொழி, இந் நாட்டின் சொந்தமொழி! அதற்கு ஆபத்து எனறால முரசு கொட்டுவதும் களம் காண்பதும் பெருமை படக்கூடிய ஒரு செய்தி. தாளமுத்து நடராசன் கல்லறை, அப்படிப்பட்ட பெருமையை நம நாட்டிற்குத் தந்திருக்கிறது. அந்தப பெருமையைச் சிதைக்க, தமிழ் நிலத்திற்கே மாசுதேடித்தர, இன்று சில குள்ளநரிகள் துணிந்து முன்னடி எடுத்து வைக்கிறார்கள் — தமிழனின் புறநானூற்றை மறந்து.

திருச்சியில் இந்தி வாத்தியார்கள் மாநாடு நடைபெற்றிருக்கிறது. இந்திவாத்தியார்களுக்குச் சலுகைகள் தரப்படவில்லை, சம்பளம் போதவில்லை என்று ஏதாவது பற்றுக்குறை பாசுரம் பாடியிருந்தால், தொலைந்து போகட்டும் என்று கூறியிருப்போம்! அல்லது ‘அய்யோ பாவம்!’ என்று அனுதாபத்தைக்கூட தெரிவித்திருப்போம்! அதை விடுத்து, இந்திவாத்தியார்கள் தோள் தட்டினார்கள், போர் போர் என்று கழுத்தறுத்த கோழியைப் போலக கத்தினார்கள் என்பதைக கேட்கும்போது நமக்குக் கோபம் வரவில்லை—சிரிப்பே வருகிறது! சிரித்துச் சிரித்து விலாவும் நோகிறது.

‘தமிழ் நாட்டில் இந்தியை எல்லோரும் கற்கும்படி செய்வதற்காகக் கிளர்ச்சி நடத்தவேண்டும்!’ என்று மாநாடு கூட்டி, இந்தி வாத்தியார்கள் அறிவித்திருக்கிறார்கள்.

‘தேசிய மொழியான இந்தியை பரவலாக அனைவரும் கற்க வேண்டும், இதற்குக் கிளர்ச்சி செய்தால்தான் வெற்றியடைய முடியும்!’ இப்படி அந்த மாநாட்டில் பேசப்பட்டது, இல்லை ஜெயபேரிகை கொட்டப்பட்டது!

ஓகோ என்று ஆடம்பரத்தோடு தலைநிமிர்ந்து வந்த இந்தியே ஓட்டமெடுக்கவும்,ஆச்சாரியார் சட்டசபையினுள் கள்ளவழியாக நுழைந்ததைப் போல, இப்பொழுது முக்காடிட்டு பதுங்கி வரவும் ஆரம்பித்திருக்கிறது என்றால், அந்த இந்தி மொழியினால் வயிறுவளர்க்கும் இந்த வாத்தியார்கள் நமக்கு எம்மாத்திரம்? இவர்களின் சலசலப்பைக் கண்டா, நடுநடுங்கிவிடப் போகிறோம்?

யாராவது அரசியல் வாதிகள் இந்திக்காகக் கிளர்ச்சி நடத்த வேண்டுமென்று கூறியிருந்தால், நாம் கோபமடைந்திருப்போம். ஆணவம் அவ்வளவு தூரத்திற்கு முற்றிவிட்டதா என்று தட்டிக் கேட்டிருப்போம். அப்பொழுது நிலைமையோ வேறு விதமாக இருந்திருக்கும்.

பாவம், இவர்கள் வாத்தியார்கள்! சாதாரண வாத்தியாராக இருந்தாலாவது மக்களிடத்தில் செல்வாக்கும் மதிப்பும் இருந்திருக்கும். இவர்களோ இந்திவாத்தியார்கள், ‘மக்களிடத்திலோ பெற்றோர்களிடத்திலோ ஒரு துளியும் மதிப்பு இல்லாதவர்கள்! சேவல் கூவினால் பொழுது புலரும், இவர்கள் கத்தித்தானா கிளர்ச்சி உண்டாகப் போகிறது?

இருந்தாலும் ஏன் இநத வீண்வேலையில் இறங்கி, தேவையில்லாமல் மக்களின் எதிர்ப்பையும், உடனிருக்கும் மற்ற வாத்தியார்களின் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்கிறீர்கள் என்று அவர்களை நாம் கேட்கிறோம். ஆழந்தெரியாமல் காலைவிடாதீர்கள் என்று எச்சரிக்கை செய்கிறோம்!

புலிக்குகையில் நரிகள் நர்த்தனமாடினால், நிலைமை என்னவாகும்? யோசித்துப்பாருங்கள்!

## மடாதிபதிகளின்...

1-ம் பக்கத் தொடர்ச்சி

ஒரு வகை செருப்புத்தானே?

இந்த? நடராசன் வலது காலைத்தூக்கியாடினால் நல்லதா? இடது காலைத் தூக்கினால் நல்லதா? வலக்கை எங்கிருக்க வேண்டும்? இடக்கை எப்படித் தொங்க வேண்டும் என்பது பற்றியும், பிள்ளையாருக்குத் துதிக்கை எவ்வளவு நீளம், எப் பக்கம் துதிக்கை படிய வேண்டும், இடமா? வலமா? என்பதைப் பற்றிய விவாதங்களிலுந் தானே அறிவும், ஆற்றலும், சிந்தனையும் செலவிடப்பட்டன?

இதே நேரத்தில்தான் மற்ற நாட்டினர் தமது வாழ்வு பற்றிக் கவலைப்பட்டனர். அதற்கான வசதிகளையும், வாழ்க்கைத் தேவைகளையும் பெருக்கிக் கொண்டனர். தமது தேவையை பெருக்கத் துணையாக விஞ்ஞான அறிவையும், ஆற்றலையும் பெருக்கிக்கொண்டு முன்னேறினர்—முன்னேறி செல்கின்றனர் விஞ்ஞான அறிவால்-ஆராய்ச்சியால் பலனும் கண்டு களிக்கின்றனர்!

தங்கள் அறிவு—ஆற்றல் உழைப்பு ஆகியவற்றின் உதவியால் தங்கள் தேவையைப் பெற்றனர். பலனுக்கும் அதனை பயன்படுத்தும் முறைக்கும் தக்க வேலியமைத்து நல்வாழ்வு வாழ்கின்றனர், மேல் நாட்டார்.

இந்த நாட்டில், மேல்நாட்டார் கண்டு பிடித்த விஞ்ஞானத்தின் துணைகொண்டு ஆவடிக் கருகில் ஒரு தொழிற்சாலை ஆரம்பித்தால் ஒரு தனிப்பட்ட நபர் ஆயிரம் பேரைக்கொண்டு பத்தாயிரம் பேர் செய்யும் அளவுக்குப் பலன் கண்டு கொழுத்திடும் நிலைமைதானே ஏற்படும்—ஏற்படுகின்றது? ஏன்?

அங்கே விஞ்ஞான வளர்ச்சியும், அதே நேரத்தில் நாகரிக சாதனங்களைப் பயன்படுத்திடும் பக்குவமும் பகுத்தறிவுப்படி பங்கு போடப்படுகின்றன. அந்தப்பண்பு—பகுத்தறிவுப் பண்பு அந்த மக்களிடையேஇருப்பதே முக்கிய காரணமாகும். இங்கு அந்த முன்னேற்றமும் இல்லை—அதே நேரத்தில் பகுத்தறிந்து நடந்திடும் பண்பும் ஏற்படவில்லை — ஏற்படுத்தப் படவுமில்லை.

சுவர் இருந்தால்தானே—செப்பனிடப்பட்டால்தானேசித்திரம் எழுத முடியும்? பாசி நீக்கப்பட்டால்தானே பருக முடியும், எத்தகைய தண்ணீரானாலும்? தூசு துடைக்கப்பட்டால்தானே ஒளிவீச முடியும், எவ்வளவு உயரிய மணியானாலும்? உருக்கி வார்க்கப்பட்டால் தானே உபயோகமாகும், வெட்டியெடுக்கப்பட்ட எந்தத் தங்கக் கட்டியானாலும்? சமுதாயச் சீர்கேடுகளும், மத மூடநம்பிக்கைகளும் நீக்கப்பட்டால்தானே தக்க பொருளாதார, அரசியல் முன்னேற்றமும், அமைப்பும் காணமுடியும்? அமைத்திடவும் இடமுண்டு?

சமுதாய அமைப்பிலும் மதத் துறையில் தக்க சீர்திருத்தங்களும் முன்னேற்றங்களும் ஏற்படுத்தாமல், நாம் நம்மைப் பற்றியும, நமது முன்னோர் வாழ்ந்த பெருவாழ்வுபற்றியும் எவ்வளவு தான் பெருமைப்பட்டும் பயன் என்ன? முடியுடை மூவேந்தர் ஆட்சிப் பெருமையும், அவர்கள் பெற்ற வெற்றிகள் குறித்தும் பேசுவதற்குப் பொருள் தான் என்ன? இளங்கோ செய்த சிலம்பும் எழில்நிறை சிவக சிந்தாமணியும் பெற்றோம் என்று பெருமிதம் அடைந்து விட்டால் மட்டுமே போதாது. அகம், புறம், கலிங்கத்துப் பரணி பற்றிப் பூரித்திடுவதோடு நின்று விட்டால் பயன் ஏதும் இலலை. நாம செய்ய வேண்டிய முதல் வேலை—முக்கிய வேலை முன்னணிக் காரியம் சமுதாயத்திலுள்ள கேடுகளைக் களைவதும் மதமூட நம்பிக்கைகளை விரட்டி யடிப்பதுமே யாகும்.

இருபதாம் நூற்றாண்டின், இந்த ஆண்டிலும் நமது நாட்டில் நடைபெறும் மூடநம்பிக்கைப் பழக்க வழக்கங்களை எண்ணிப் பார்க்கும்படி உங்க

4-ம் பக்கம் பார்க்க

# கண்ணீர் வடிக்கிறது ‘கல்கி’ ஞான சூன்யமாகிறது ‘தந்தி’

## வடநாட்டானுக்கு வால்பிடிக்கும் பார்ப்பனர் எப்படி தமிழராகமுடியும்?

### பேராசிரியர் அன்பழகன் பேச்சு

(நேற்றைய தொடர்ச்சி)

நீதிக் கட்சியினர் பதவிப் பித்தர்கள் என்று பார்ப்பனர்களாலும் காங்கிரஸ்காரர்களாலும், தூற்றப்பட்டார்கள், யார் பதவிப் பித்தர்கள்? அப்பொழுது 1928 லே பக்கிங்காம் கர்னுடிக் மில் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து பெரும் போராட்டம் நடத்தினர், நமது தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள்தான் அந்தப் போராட்டத் தலைவர், அப்பொழுது கவர்னராக இருந்த வெலிங்டன் பிரபுகொடியஅடக்கு முறையைக் கையாண்டார். திரு. வி. க, வை. நாடு கடத்த திட்டமிட்டார், அந்தச் சமயத்திலே ஆட்சியிலே யிருந்த நீதிக்கட்சித் தலைவர்களான பனகல் அரசரும் மற்றவர்களும் திரு. வி, க, வை. நாடு கடத்தினால் எங்களுக்கும் பதவி வேண்டாம், நாங்களும் வெளியேறுகிறோம், என கண்டிப்புடன் கூறிவிட்டனர், திரு. வி. க, அப்பொழுதும் காங்கிரஸ்காரர்தான், இருந்தும் அவருக்காக நீதிக்கட்சித் தலைவர்கள் தங்கள் பதவிகளைத் துறக்கத் தயாராக இருந்தனர். உடனே, கவர்னர் தம் முடிவை மாற்றிக்கொண்டு, திரு, வி, க வை நாடு கடத்தாமல் வீட்டிலேயே காவலில் வைத்தார். இந்த நிகழ்ச்சியை திரு. வி. க. அவர்களே பலமுறை சொல்லி, நீதிக் கட்சியினரின் பெருந்தன்மையை புகழ்ந்திருக்கிறார். இப்பொழுது கூறுங்கள் யார் பதவிப் பித்தர்கள் என்று! பதவிகளுக்காகவே பாடுபட்ட காங்கிரசார நீதிக் கட்சியினரைப் பாத்து பொறுமைப்பட்டுதான் பதவிப் பித்தர்கள் என்று கூச்சலிட்டனர்.

1937—38-லே ஆச்சாரியார் சென்னை முதலமைச்சரானார். இந்தியா முழுவதும் அறிவாளி என்று தன்னைப்புகழ வேண்டுமெனஎண்ணினார். இந்தியை பள்ளிக் கூடங்களிலே கட்டாயப் பாடமாக வைத்தார். அதைக் கண்டநாடுகுமுறியெழுந்தது இந்தியை பெரியார் எதிர்த்தார். தமிழர்களெல்லோருமேஎதிர்த்தனர் அப்பொழுது "தமிழ் நாடு தமிழருக்கே" என்ற ஒலி முழங்கிற்று அந்த ஒலியைக்கேட்டு ஆனந்த விகடன் ‘எலிவளை எலிகளுக்கே’ என்று கிண்டல் செய்தது; கேலிச் சித்திரம் வரைந்தது. நம்மை எதிர்ப்பவர்களெல்லாரும் யார் என்று பார்த்தோம். அத்தனை பேரும் பார்ப்பனர்களாகவே யிருந்தனர். ஆனந்தவிகடன் ஆசிரியா பார்ப்பனர் அதிலே எழுதிய கல்கி பார்ப்பனர். இந்து ‘சுதேசமித்திரன்’ களெல்லாம் பார்ப்பனப் பத்திரிகைகள். அப்பொழுது நம்மை எதிாத்துப்பேச இந்த சின்னது பெரியதுகளெல்லாம் விலாசம் தெரியாதிருந்த காலம். தமிழ்நாடு தமிழருக்கே என்றதும், தமிழ் நாடு தமிழருக்கில்லாமல் கன்னடியனிடமா போய் விட்டது? என்று கேட்டார்கள். பார்ப்பனர்கள். தமிழ்நாடு என்ன கடலிலா மூழ்கிவிட்டது? என்று கிண்டல் செய்தார்கள்,

‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்றால், ஆந்திரருக்கு ஆந்திரநாடு அல்ல என்று அர்த்தமல்ல கேரளநாடு கேரளருக்கு அல்ல என்பதல்ல பொருள் அவரவர் நாட்டை அவரவரே ஆளவேண்டும் என்பதுதான்.

‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று நாம் முழங்கியபோது ‘நாங்களும் தமிழர்கள்தானே என்றார் ஆச்சாரியார் அவருடைய வால் என்று கூறிக்கொள்ளும் கல்கியாரும் தானும் தமிழர்தான் என்றார். ஆனந்த விகடனும், ஹிந்துவும் தமிழர் என்ற உரிமை பாரட்டின, உடனே நாம் சொன்னோம், தமிழ்பேசுவோரெல்லாம் தமிழர்கள் அல்லரென்று. இந்தியை ஆதரித்து வடநாட்டானுக்கு வால் பிடிக்கும் பார்ப்பனர்கள் எப்படி தமிழர்கள் ஆகமுடியும்? எனவேதான் நாம் சற்று தெளிவுடன் வளர்ச்சி பெற்றோம். திராவிட நாடு திராவிடருக்கே என்று,

ஆந்திர நாட்டிலுள்ள பார்ப்பனர்களும் கேரள நாட்டிலுள்ள நம்பூதிரிகளும் எப்படி திராவிடர்களாக முடியும்? அந்தந்த நாட்டிலுள்ள பார்ப்பனரல்லாதார்கள்தான் திராவிடர்களென்பதை எடுத்துக் காட்டினோம்,

, இந்தி எதிர்ப்பின்போது தலைவர் பெரியார் பெல்லாரி சிறைக்கு அனுப்பப்பட்டார், அப்பொழுதிருந்த நமது மாபெரும் தலைவர்களில் ஒருவரான சர். ஏ. டி, பன்னீர்செல்வம், சட்டசபையிலே ஆச்சாரியைப் பார்த்து இது தகுமா என்று கேட்டார் "தள்ளாத வயதிலே பெரியாரை உஷ்ணமிகுந்த பெல்லாரி சிறையிலேவைத்திருக்கிறீர்களே, அவர் எடை குறைந்து விட்டிருக்கிறதே, இதற்கு என்ன சொல்கிறீர் ஆச்சாரியாரே, என்று கேட்டார் பன்னீர்செல்வம், அதற்கு ஆணவத்துடன் பதில் கூறினார் ஆச்சாரியார் எடை குறைந்தால் உடலுக்கு நல்லது என்று. எவ்வளவு திமிராகக் கூறினார், பாருங்கள்! 15 ஆண்டுகளுக்கு முன்பு இவ்வாறு கூறினார் ஆனால் இப்பொழுது பெரியாருக்கு அரசியல் காரணமாக ஒருபவுண்டு எடை குறையநேருமானால் அதே ஆச்சாரியார் அவ்வாறு கூற முடியுமா? கூறினால் என்னவாகும்?

இந்தி எதிர்ப்பிலே தாளமுத்து—நடராசன் சிறையிலே இறக்க நேரிட்டது இந்தஅக்கிரமத்தைப் பற்றி சட்டசபையிலே ஆச்சாரியாரைக் கேட்டார்கள். அவர் பதில் கூறியது என்னதெரியுமா? தாளமுத்து, நடராசன் இருவரும் தற்குறிகள் படிக்காதவர்கள் அதனால்தான் இறந்தார்கள் என்றார். படிக்காத குற்றத்துக்காக இறந்தார்கள் என்றால், இப்பொழுது நான் கேட்கிறேன், படிக்காத காமராஜர் எப்படி முதல் மந்திரியாக வர முடிந்தது? ஆச்சாரியார் பதில் சொல்ல முடியுமா? படிக்காத காமராசர்தானே ஆச்சாரியாரை மூலையில் ஒதுக்கித்தள்ளி விட்டு முதல் மந்திரியானார்!

காமராசர் முதல் மந்திரியாக இப்பொழுது வரமுடிந்ததே மூதறிஞர் முத்தையாவால்தான் முத்தையாவின் வகுப்பு வாரி உரிமை இல்லாவிட்டால், மந்திரிசபையில்பார்ப்பனர்களாகத்தானே இருப்பார்கள் காமராஜருக்கு இவ்வளவு இனவுணர்ச்சி தான்தோன்றியிருக்கமுடியுமா?

மாமராஜரை நாம் பாராட்டுகிறோம். என்று கூறினால் அதற்கு பொருள்புரிந்துகொள்ள முடியாத தினத்தந்தி நாம் காமராசரை ஆதரித்துப் பின் செல்கிறோம் என்பதாக எழுதுகிறது.

காமராசரைப் பற்றி அண்ணா கூறினார், அவர் பெண்ணுமல்ல. அலியுமல்ல, பெண் வேடம் போடப்பட்டுள்ள ஆண் என்று உண்மையான ஆண்தான் காமராசர் என்பதை நேரில் பார்த்த பின்தான் உணர்ந்தார். ஆனால் வடநாட்டு நேருவால் பெண் வேடம் போடப்பட்டிருக்கிறார், வடநாட்டுக்கு விபசாரம் போகிறார், நாங்கள் அதை இப்பொழுதும் கண்டிக்கத்தான் செய்கிறோம். அண்ணா கண்ட அரசியல் கண் தினத்தந்திக்குக்கிடையாது அது ஆண்மை, பெண்மை என்ற அடிப்படையில், உடலுறுப்புகளை நினைத்து அந்த ஆபாசக் கண்ணோடு கண்டு எழுதுகிறது.

காமராஜரை நாம் ஒரு குழந்தைபோல எண்ணுகிறோம், அந்த திராவிட இன உணர்ச்சிக் குழந்தை இரண்டு மாதங்களுக்கு முன்தான் பிறந்தது, பிறந்த தம்பியை அண்ணா பார்க்க வில்லை, எனவேதான் அண்ணா சொன்னார்பிறந்த குழந்தை ஆணா அலியோ தெரியாது என்று. பின்னர் அந்தக் குழந்தையை நேரில்கண்டார், புரிந்து சொன்னார் காமராஜர் ஆண்தானென்று. தம்பி அண்ணனைப் பார்க்கபோவது குற்றமா?

குழந்தையை வளர்க்கவேண்டியவர்கள் நாம் தான். ஆனால், அந்தக் குழந்தை விஷமம் செய்தால் காதைப்பிடித்துக் கிள்ளுவோம். முதுகிலே தட்டுவோம். தலையிலே குட்டுவோம்.

குறைகாணுமிடத்திலே கண்டித்துதான் ஆவோம். பாராட்டும் செயல் புரியும் போது பாராட்டுவோம். இதற்கு நாங்கள் காங்கிரசை ஆதரிக்கிறோம் என ... அர்த்தம்?

காமராஜர் கல்வித்திட்டத்தை எடுத்தார், எனவே, அவர் செய்த அந்த நல்ல காரியத்தை வரவேற்றோம் இதுஒன்றும் புதுமையில்லையே எங்களுக்கு?

காங்கிரஸ் செய்த நல்ல காரியம் ஒவ்வொன்றையும் வரவேற்று, பாராட்டித்தானேயிருக்கிறோம். மதுவிலக்கு வந்தது மனமார வரவேற்றோம், ஜமீன் ஒழிப்புவந்தது காங்கிரசைப் பாராட்டினோம். இனம் தாரிகளையும் சேர்த்து ஒழிக்கச் சொன்னோம். இதைப் போல தான் கல்வித்திட்ட ஒழிப்புக்கும் நாங்கள் பாராட்டு தெரிவித்தோம்.

காமராஜர் கல்வித்திட்டத்தை ஒழித்தது எதற்கு? நமக்காகவா ஒழித்தார்? திராவிட முன்னேற்றக் கழகத்தார் வெற்றி விழா நடத்த வேண்டுமென்பதற்காகவா ஒழித்தார்? மக்களுக்கு மதிப்புகொடுத்தார், மக்களின் எண்ணத்திற்கு மதிப்பளித்து ஜனநாயகத்தைக் காப்பாற்றினார் தனக்கு நாட்டிலே நல்ல பெயர் ஏற்படவேண்டுமென்று நினைத்தார் தான்பதவியிலிருக்கும்வரை எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பை ஓரளவுக்காவதுகுறைத்துவைக்க எண்ணினார், எனவேதான் ஆச்சாரியாரின் திட்டத்தைஒழித்தார் ஜனநாயகத்தைக் காப்பாற்றினார்

ஆச்சாரியாரோ, பதவிஆசையே இல்லையென்று கூறி ஆண்டவனிடம்நேர்தொடர்புகொள்ளப் போவதாகக் கூறி அரசியல் துறவியானார். குற்றாலத்துக்குச் சென்றார். அனல் பதவி கிடைக்கிறது என்று தெரிந்தவுடன் ஓடோடி வந்தார். வந்தவர் வழியோடு நுழைய கூட நேரமில்லாமல் கொல்லைவழியாகபதவிக்குப் புகுந்து ஜனநாயகத்தைக் கொலை செய்தார்.

காமராஜர் நாங்கள் ஆதரிக்கக் கூடிய அளவு ஒரு சில காரியங்களைத் தவிர, வேறு எதிலும் காங்கிரசை விட்டு. வடநாட்டு அடிமைத் தனத்தை விட்டு மாறியா விட்டார். அவர் அசல் காங்கிரஸ்காரர்தானே!

கல்கி பத்திரிகை காமராஜரின் செயலைக் கண்டு கதறுகிறது. பிராமணர்கள் இனி டாக்டராகவோ. என்ஜினியராகவோ வரவேண்டாம். வரமுடியாது என்று எழுதுகிறது.

மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்ப்பதற்கு ஆள்தோற்றத்துக்கும், உடலமைப்புக்கும் என 150 மார்க்குகள் என்று இருந்தது. அதை ஆச்சாரியார் பதவிக்கு வந்தவுடன் 50 ஆக்கினார். பிறகு காமராஜர் மீண்டும் 150 ஆக்கி விட்டார், இதைக் கண்டு ஆரிய ஏடுகளெல்லாம் எதிர்க்கின்றன. இதற்குத்தான் கல்கி கண்டிக்கிறது. இந்து எதிர்க்கிறது. பார்ப்பனர் எல்லோரும் எதிர்க்கின்றனர்,

ஏட்டிலே எழுதும் பரிட்சையைக் கொண்டு மட்டும் ஒருவனுடைய தகுதி திறமையைத் தெரிந்து கொள்ள முடியாது, பரிட்சை மார்க்குகள் போடுவதில் எவ்வளவோ ஊழல்களிருக்கின்றன, தகுதி திறமை என்று கூறியவர்கள், 150 மார்க்குகள் உருத்தோற்றத்திற்கு வைத்ததினால் மட்டும் ஏன்எதிர்க்கவேண்டும். ஆச்சாரியார் 50 ஆகக்

4-ம் பக்கம் பார்க்க

## மடாதிபதிகளின்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ளைக் கேட்டுக் கொள்கிறேன்.

கோயம்புத்தூர் அருகிலே காரமடை எனறு ஒரு கிராமம் என் அது கிராமங்கூட அல்ல- ஒரு சிற்றூர் இருக்கின்றது. அங்கே இப்போதும் ஆண்டுதோறும் நடைபெறும் ஒரு விழாவை நினைத்தாலே போதும் நாம் நமது சமுதாயத்தில் எவ்வளவு பின் தங்கியுள்ளதைத் தெரிந்து கொள்ள.

கோவை நகரம் செல்வம் நிறைந்த நகரம். அங்கே படித்தவரும், பட்டம் பல பெற்றவரும் உள்ளனர். ஆலைகள் உண்டு அங்கே மத்திய சாக்காருக்கு மதிமிகுந்த நிதியமைச்சரான சர் சண்முகத்தைப் பெற்று வளர்த்துத் தந்ததும் அந்தக் கோவை நகரந்தான். அத்தகைய நகரத்தின் பக்கத்திலே உள்ள ஒரு சிற்றூரில்— காரமடை என்ற சிற்றூரில் ஆண்டுதோறும் ஒரு விழா நடைபெறுகின்றது.

அங்கே ஒரு சாமியாடியின் மீது வருடத்திற்கு ஒரு முறை அனுமார் ஆவேசம் வருகிறது. அந்த சாமியாடி மீது அனுமார் ஆவேசம் வந்துஆடிக்கொண்டே இருப்பான். அப்போது நமது தாய்க்குலத்தினர், கர்ப்பந்தரிக்காத பெண்மக்கள் கூடிச் செல்கின்றனர், தட்டு நிறைய பழவகையும் பலவும் ஏந்தி சாமியாடி ஆடிக் கொண்டிருக்கும் போது அவனது வாயில் வாழை அல்லது ஏதாவதொருபழத்தைத் திணிக்கின்றனர் அச்சாமியாடி பழத்தைபாதியோ அல்லது சிறிதோ மென்று கீழே துப்புகிறான். சாமியாடி மென்று கீழே துப்புகின்ற எச்சில் பழத்தைப் பெண்கள் பயபக்தியோடு மடியில் ஏந்தி அதனைத் தமது வாயிலிட்டுப் பிரசாதமென மென்று தின்கின்றனர்!! இதனால் கர்ப்பந்தரிக்குமாம், இது ஒரு நம்பிக்கை!

எவனோ ஒரு சாமியாடி, தன் நிலை மறந்து ஆடும்போது வாயில் மென்று கீழே உமிழும் எச்சில் பழத்தைக் கையில் ஏந்திப் பிரசாதம் எனப் பக்தியோடு சாப்பிடும் பெண்மக்களும் இந்த நாட்டில், சமுதாயத்தில் இருக்கத்தானே இருக்கிறாகள். அதுவும் எச்சில் உண்பதால் குழந்தை பெறலாம் என்ற நம்பிக்கையோடு!

ஆகாய விமானத்தில் பறக்கிறான்; வெளிநாட்டான் அணுகுண்டைச் செய்கிறான். இத்தகைய நாட்களிலே காரமடையில் கர்ப்பவதிகளாவதற்காக எச்சில் உண்டிடும் பெண்டிர் உள்ளனரே ?

எப்படிப்பட்ட காலம் இது ? சூரிய மண்டலத்தைப் பற்றிய படங்களைப் பார்க்கிறோம். சீனப் பிரதமர் டெல்லியில் பேசுகிறார், அமெரிக்க டாலர்கள் நாட்டுக்கு நாடு தாவிப் பரவுகின்ற நேரம்? இப்படிப்பட்டநாட்களிலே இன்றும் காரமடை நிகழ்ச்சிகள் நமது சமுதாயத்திலேமதமூடநம்பிக்கைகளின் பேரால் நடந்து வருகிறதே ?

சமுதாயத்தில் இத்தனை சீர்கேடுகளையும், கோணல்களையும் வைத்துக் கொண்டு எங்கிருந்து அரசியல் முன்னேற்றம் காண முடியும் ?

தலை மாத்திரம் பெருத்து கால் முடமாக இருந்தால் மதிப்பார்களா ? தலை மட்டும் சிறுத்து கால்கள் பெருத்திருந்தால் அழகன் என்று கூறுவர்? தலை பெருத்தும் கால் சிறுத்தும் குனை வயிறும் இருந்தால் அவனைப் ஆரோக்யசாலிஎன்றுஅழைத்திட முடியுமா? சமுதாயகோணல்களை வைத்துக் கொண்டு அரசியல் முன்னேற்றம் பேசினால் நடக்குமா?

நாம் நமது அரசியல் துறையில் மட்டும் மேல்நாடுகளைப் பின்பற்றி வருகிறோம். நம்மிடையே சட்டசபை இருக்கிறது எம் எல் ஏக்கள் உண்டு மந்திரிமார்இருக்கிறார்கள். மத்ய சர்க்கார், பார்லிமெண்டுஎதைத்தான்விட்டோம் மேல் பூச்சுக்கு மட்டும் மேல் நாட்டைப் பின்பற்றிவிட்டோம் ஆனல் உள்ளப் பண்பும் பக்குவமும் பெற மட்டும் தவறிவிட்டோம். சமுதாய முன்னேற்றத்திற்கானவிஞ்ஞான அறிவுவளரவில்லை— வளர்க்கப்படவில்லை, நம்மிடையே!

நம்மிடையே உள்ள பழங்கால பிடிப்புகளும், மதமூட நம்பிக்கைகளுந்தான் நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டைகள் என்பதை மனதில் வைக்க மீண்டும் வேண்டுகிறேன்.

அண்மையில் சர்க்கார் நமது நாட்டுக் கோயில்களிலே உள்ள நகைகளின் மதிப்பை வெளியிட்டுள்ளனர். சர்க்காரின் கணக்குப்படி, மொத்த நகைகளின் மதிப்பு நாலரை கோடி ரூபாய். இது இன்றைய கணக்கு. இதற்கும் நூறு ஆண்கட்கு முன்னர் கணக்கெடுத்திருந்தால் குறைந்தது நானூறு காடிகளாவது இருந்திருக்கும். அக்கிராமக் காரர்களாக விளங்கிய சில தர்மகாத்தாக்களும், அநியாயஅர்ச்சகர்கள்பலரும்உள்ளே போவோர் வருவோரில் உள்ள திருடர்களும் பலமுறைஎடுத்துச் சென்றதுபோக, மிகுதி உள்ளது தானே இன்றைய கணக்குக்கு கிடைத்திருக்கும்?

நாலரைகோடி ரூபாய்கள் கோயில்களிலே இன்று முடங்கியுள்ளது. எல்லா வலிவுள்ள, ஆரோக்கியமான மனிதனது கைகால்களைக் கட்டி முடமாக்கி வைத்திருப்பதைப் போலத் தானே, நாட்டில் நடமாடவேண்டியபொன்னையும், பொருளையும் கோயில் களிலே அணி, பணிகளாகப் பூட்டி வைத்திருப்பது?

இந்தப் பணத்தைக் கொண்டு அந்தந்த ஆண்டவர் பெயராலேயே, பள்ளிகளும், மருத்துவ விடுதிகளும், தொழிற்சாலைகளும் ஏன் கட்டக்கூடாது. இதனல் பணமும் நாட்டில் பரவும், மக்கள் துயரும் தீருமே!

மற்ற நாடுகளிலிருந்து கிறித்துவமதத்தைப் பரப்ப இந்த நாடு வரும் பாதிரிமார் என்ன செய்கிறார்கள். மருத்துவ விடுதி கல்விச் சாலைகள் ஏற்படுத்துகிறார்களே! அதைப் பார்த்தாவது நம்மவர் திருந்தவேண்டாமா?

சுயமரியாதைக்காரர்கள் பல ஆண்டுகளாகப் பேசி வருவதன் பயனை இப்போதுதான் அதுவும், ஓரிரு மடாதிபதிகள் தமிழ் என்றும், மக்கள் பணி என்றும், பேசத் தலைப்பட்டுள்ளனர்.

கோயில்களில் பணம் கடவுள்

## கண்ணீர்...

—

ம் பக்கத்தொடர்ச்சி

குறைத்த போது ஏன் ஒன்றும் பேசவில்லை? ஆச்சாரியார் ஏன் அதைக்குறைத்தார்? பார்ப்பனர்களுக்குசலுகைக்கொடுக்கவேண்டுமென்று தானே? ஏட்டுப்பரிட்சையிலேமார்க்குவாங்குவதில்பல விதமுண்டுபணம்நடமாடும்செல்வாக்குசதிராடும் நேரிலே ஆளைப் பார்த்து மார்க்கு போடுவதிலே

பேரால் முடங்குவது மாத்திரமல்ல, அதன் மூலம் மக்களின் அறிவு மன்றோ அடகு வைக்கப் படுகின்றது! இது நல்லதா ? தேவை தானா என்று கேட்பது தவறா ?

இப்படி நான் பேசுவதால் எனக்கும் கடவுளுக்கும் ஏதோ வம்பும் வழக்கும் இருப்பதாக எண்ண வேண்டாம். கடவுள் என்போன்றுருக்கு என்னகுறை வைத்து விட்டார், அவர் மேல் கோபப்பட?

கடவுளுக்கு என் மீதும் என் கொள்கைகள், பேச்சு ஆகியவற்றின் மீதும் கோபம் அல்லது குறையிருந்தால் அவர் நினைத்தால் ஒரே விநாடியில் என்னை அழித்து விடலாமே இந்தமேடை அதிர்ந்து, பூமி பிளந்து என்னை விழுங்கிடச் செய்யலாமே? ஏன் செய்ய வில்லை? நான் செய்வது பேசுவது கடவுள் சம்மதம் என்றுதானே பொருள் ?

எனக்கோ நான் சோந்துள்ள கழகத்திற்கோ கடவுள்மீது எந்த விதமான தனிபட்ட வெறுப்போ விராதமோ கிடையாது. ஆனல் கடவுளைப பற்றி பேசிடும் நிலைமைக்கு நாட்டின் இன்றைய சீர்கெட்ட நிலைதான் காரணம்,

கடவுள் என்று பலப்பல உருவங்களையும், அந்த உருவங்களைப்பற்றிய பலவித கட்டுக் கதைகளையும், அதன் சார்பாகத் தேர், திருவிழா சடங்கு என்றும் அதன் பின்னல் சாதி, பேதமும் அதன் மூலம் மக்களை மக்கள் தாழ்த்திடுவதும், பிறா உழைப்பைச் சுரண்டிடும் சூதுத்திட்டமும் இன்றைய சமுதாயத்திலே நிலவி வருவதைத்தான் நாங்கள் கண்டோம் காண்கிறோம்.

பாடுபட்டும் பிழைக்க முடியாத பாட்டாளியை, ஒதுக்கப் பட்ட தோழனைக் கேட்டால் கடவுள்விதி என்கிறான்? எங்கே கடவுள் என்று கேட்கிறோம், அவன் ஐயரைக் காண்பிக்கிறான் அவரைக் கேட்டால் வேதத்தைக் காட்டுகிறார். வேதங்கள் ரிஷிகளைக் காட்ட, ரிஷிகள் கடவுள்கள் சொன்னவைகள் என்று கூறுகிறார்கள்,

எனவே மக்களின் இல்லாமைக்கும் போதாமைக்கும் கடவுள்தான் காரணம் என்று மக்கள் நம்புகின்றனர். இதனல் பலர்வாட, சிலர் வசதியாக வாழ முடிகிறதுஎன்பதையும்தெரிந்து கொண்டோம்.

எனவேதான் நாங்கள் அந்த கடவுளையே, ஆண்டவனையே மாற்றி யமைத்து, சமுதாயக் கோளாறுகளைப் போக்கி மதத் துறையிலே உள்ள மாசுகளைத் துடைத்து பொருளாதாரசரிவை சரிப்படுத்தி புதியதோா அரசியலை, திராவிடநாடு தனி நாடாகிடும் அரசியலை உருவாக்கப் பாடுபட்டு வருகிறோம்,

(தொடாச்சி நாளைவரும்)

என்ன ஊழல் நடக்க முடியும்?

பார்ப்பனர்கள் கொஞ்சகாலத்திற்கு படிக்காமல் தானிருக்கட்டுமே அவர்கள் ஆதிக்கம்குறைய வேண்டாமா? கோவிலிலே அவர்கள் ஆதிக்கம்செலுத்தினர்களே நாம்குறுக்கே நின்றோமா? உத்தியோக மண்டலத்திலே அவர்கள் ஆதிக்கம் கொண்டிருக்கவில்லையா? மூதறிஞர் முத்தையாவின் வகுப்புரிமைச் சட்டம் வருவதற்கு முன்பெல்லாம் நாட்டின் நிலை என்ன?

டாக்டர் என்றுல் ஒரு ரங்காச்சாரி, வக்கீல் என்றுல் ஒரு ராமமூர்த்தி, நீதிபதி என்றுல் ஒரு சாம்பசிவ சர்மா இப்படித் தானே இருந்தது. இது போதாதா? இப்பொழுதுதானே ஏதோ சில திராவிடர்கள் படித்து உத்தியோகத்துக்கு வர ஆரம்பித்திருக்கின்றனர். 10 ஆண்டுகளுக்கு முன்பு பார்ப்பனரல்லாதாருக்காக ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை அளவுகூட பிள்ளைகள் படிக்க வருவது கிடையாதே! இப்பொழுதுதானே பார்ப்பனரல்லாதார் விழிப்புணர்ச்சி பெற்று வருகின்றனர் முன்பெல்லாம் பார்ப்பனர்களைக் கண்டால் தோளில் இருக்கும் துண்டு இடுப்புக்கு வந்துவிடும், இப்பொழுது பார்ப்பனரைக் கண்டால் தவறி இடுப்பில் கட்டியிருந்தாலும் இழுத்து தோளிலே போட்டுக் கொண்டு முறைப்பாகச் செல்கிறார்களே நம்மவர்கள். இந்த நிலையை; மறுமலர்ச்சியை உண்டாக்கியவர் மூதறிஞர் முத்தையா என்பதில் சந்தேகம் என்ன ?

அசைச்சர் முத்தையாகொண்டு வந்த கம்யூனல் ஜி. ஓ, ஓரளவுக்குப் பார்ப்பனர்களைப் பாதித்தாலும், உள்ளபடியே அது இந்த நாட்டிற்கு அவசியமான, நீதியான திட்டம்என்பதை அன்று அமைச்சர் குழுவிலிருந்த ஒரு பார்ப்பன மந்திரிகூட ஒப்புக்கொண்டார்.

ஆனல் மற்ற பாரப்பனாகள் முத்தையாவை வஞ்சம் தீாக்க எண்ணினா. தோதலில் முத்தையாவுக்கு போட்டியாக தோழா் எஸ். ராமனுதனை நிறுத்தி வைத்தனா, இனி முத்தையாவை அரசியலிலேயே நுழையவிடக் கூடாது என்று அதற்கான வேலைகளில் ஈடுபட்டனா, முத்தையா தோல்விக்கு ஒரு திராவிடரே காரணமாக இருக்கும் படி செய்தது ஆரியம் கம்யூனல் ஜி. ஓ. வை: அரசியல் சட்டத்தில் செல்லுபடியாகா வண்ணம் அல்லாடி கிருஷ்ண சாமி அய்யர் டி. டி. கிருஷ்ண மாச்சாரி போன்ற ஆரியாகளே முன்கூட்டி அரசியல் நிாணயத்தின் பேரால் சதி செய்து, ஒழித்துவிட்டனா. அதுவும், சாதாரண நீதிமன்ற தீாப்பின் பேரிலேயே ஒழிந்தது.

எனவே, நாம் மீண்டும் வகுப்புரிமைக்காக போராடவேண்டும். மூதறிஞா முத்தையாவின் தொண்டினை நாமனைவரும் நன்றியுடன் பாராட்டவேண்டும் இங்கு முத்தையா படத்தை கே. எஸ். பாண்டியன் படிப்பகத்தில் திறக்கிறாகள். கே. எஸ். பாண்டியனை காங்கிரஸ் பலி கொண்டது, இனி காங்கிரசே பலியாகத்தான் போகிறது, அந்தக்காலத்தை விரைவில் எதிா பாாப்போம்,

[illegible] அவர்களுக்குச் சொந்தமான மெர்க்கண்டையல் அச்சகத்தில் திரு டி. பி. சுப்ரமணியம் அவர்களால் அச்சிடப்பட்டு 2|45, முத்தி